சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி, 123வது வட்ட கழகத்தின் சார்பில், 10.01.2025 வெள்ளிக் கிழமை, சீதாம்மாள் சாலையில் அமைந்துள்ள மந்திர மூர்த்தி மஹாலில், தமிழர்களின் திருநாள் பொங்கல் விழாவினை முன்னிட்டு, சமத்துவ பொங்கல் விழா, வட்ட கழக செயலாளர் மு. இ. ஏழுமலை தலைமையில், மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் மற்றும் 121 வது வார்டு மாமன்ற உறுப்பினர் நந்தனம் கி.மதி எம்.சி., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி ஆகியோரின் முன்னிலையில், மயிலாப்பூர் தொகுதி பார்வையார் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி மாநில ஆலோசகர் கோவி. லெனின் ஆகியோர் பங்கேற்ற விழாவில், மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்ட மன்ற உறுப்பினர், மயிலை த. வேலு எம்.எல்.ஏ., வட்ட கழகத்தின் சார்பில் நடைபெற்ற சமத்துவ சமத்துவ பொங்கல் விழாவினை தொடங்கி வைத்து, பொங்கல் விழா பரிசு பொருட்களை, 123வது வட்டத்திற்கு உட்பட்ட, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2, பி.எல்.சி. நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கினார்.

சென்னை தெற்கு மாவட்ட வேளச்சேரி மேற்கு பகுதி 175 வட்ட மாமன்ற உறுப்பினர் மகேஷ்வரி முருகவேல் ஏற்பாட்டில் தமிழர் திருநாள் மற்றும் பொங்கல் விழா வட்ட கழகச் செயலாளர் எஸ்.முருகவேல் தலைமையில் வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் அரிமா சு.சேகர் முன்னிலையில் தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கலந்து கொண்டு 500 நபர்களுக்கு பொங்கல் புத்தாடைகள் கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் 175 வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். பாஸ்கரன், வட்டச் செயலாளர் க.பாரதிதாசன், மாவட்ட பிரதிநிதி ஆ.வடிவேலன், வட்ட கழக நிர்வாகிகள் கோ.சினிவாசன், ம.திருமால், எஸ். விநாயகமூர்த்தி, கு.புனிதா, தஞ்சை சந்திரன், வ.ஆதிமுலம், ஏ.எஸ்.சுப்பிரமணியன், ஆர்.ஆறுமுகம், வேளச்சேரி மேற்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் மா.கோபாலகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நவீன தொழில்நுட்ப வசதிக்கேற்ப

அங்கன்வாடி மையங்களை தரமுயர்த்திட நடவடிக்கை!

சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கீதாஜீவன் தகவல்!

சென்னை, ஜன.13-

நவீன தொழில்நுட்ப வசதிக்கேற்ப அங்கன்வாடி மையங்களை தரமுயர்த்திட நடடிவக்கை எடுக்கப்படும் என்று சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்தார்.

இதுகுறித்து சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :-

ஜ.பி.செந்தில்குமார்: பழனி தொகுதி, கொடைக்கானல் வட்டம், வடகவுஞ்சி ஊராட்சி, ஜீவா நகர் பகுதியில் குழந்தைகள் மையம் அமைக்க அரசு முன் வருமா?

அமைச்சர் பி.கீதாஜீவன்: தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்ற தொகுதி கொடைக்கானல் வட்டாரம், வடகவுஞ்சி ஊராட்சி, ஜீவா நகர் பகுதியில் குழந்தைகள் மையம் ஒன்று 2007 ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு, தற்போது அங்கு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. தற்போது வாடகை கட்டடத்தில் செயல்பட்டுவரும் இம்மையத்திற்கு 2021 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட ஒருங்கிணைப்பின்கீழ் ரூ.10, 93,000/ மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகள் விரைவில் நிறைவுபெற உள்ளன. மேலும், இம்மையத்தில் தற்போது மொத்தம் 12 குழந்தைள் மற்றும் ஒரு கர்ப்பிணி பெண் என ஆக மொத்தம் 13 பயனாளிகள் மட்டுமே பயன்பெற்று வருகின்றனர். அதுமட்டுமல்லாது, இம்மையம் செயல்பட்டுவரும் ஜீவா நகர் பகுதியின் மொத்த மக்கள் தொகையின் எண்ணிக்கை 306 மட்டுமே. எனவே, மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் ஒட்டுமொத்த மக்கள் தொகை எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டால், அங்கு புதிதாக மையம் அமைக்கவேண்டிய தேவை எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜ.பி.செந்தில்குமார்: நான் 2016 லிருந்து தொடர்ந்து வைத்த கோரிக்கைகளில், நான் கேட்ட கேள்விகளில் ஒன்று இது. 2021ல் மக்கள் தலைவர், திராவிட மாடல் நாயகர் அவர்கள், தமிழ் நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அந்த ஜீவா நகர் பகுதியில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு, MGNREGS மூலமாக பணிகள் நடைபெற்று வருகின்றன. அதற்கு நான் முதலில் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், வடகவுஞ்சி ஜீவா நகர் என்பது சாலையிலிருந்து மிக உயரமான இடத்தில் இருக்கக்கூடிய ஒரு பகுதி. அப்பகுதியின் மக்கள் தொகை எண்ணிக்கை அடிப்படை, விதிகள் உள்ளிட்ட நிலைப்பாடுகள் ஆகியன குறித்து அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புவது என்னவென்றால், மலைப்பகுதிகளில், விதிவிலக்குகளின் அடிப்படையில் நீங்கள் பணிகளை எடுத்துச் செய்து மக்களுக்கு வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, வடகவுஞ்சி ஊராட்சியில் செம்பரங்குளம் என்கிற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் புதிய அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அமைச்சர் பி.கீதாஜீவன்: அது மலைப்பகுதியாக இருந்தால், அதற்கு விதியைத் தளர்வுசெய்து அமைப்பதற்கு வழிவகை இருக்கிறது. ஏனென்றால், மலைப்பகுதி மக்களின் நலனுக்காக, பழங்குடியின மக்களின் நலனுக்காக, இந்த ஆண்டு 10 மையங்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக அந்த மலைப் பகுதியைக் குறிப்பிட்டு எழுதும் போது, அப்பகுதியில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கு இந்த அரசு பரிசீலனை செய்யும்.

ஜ.பி.செந்தில்குமார்: விதிவிலக்குகளைத் தளர்த்தி அரசு அனுமதி வழங்கும் என்று அமைச்சர் அவர்கள் பதில் தந்திருக்கிறார். அதற்கு நன்றி. இந்த நேரத்திலே நான் பணிவோடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, உலக நாடுகளில் புதிய தொழில்நுட்பங்களின் வளர்ச்சி அதிகரித்து வருகின்றது. தொழில் நுட்ப வளர்ச்சிக்கேற்ற வகையில், இந்திய ஒன்றியத்தில் தமிழ் நாட்டில்தான், பிற மாநிலங்களுக்கு முன்னோடி மாநிலமாக, முன்னோடி தலைவராக, நம்முடைய மக்கள் தலைவர் தளபதியார் அவர்கள், பள்ளிகளில் smart classrooms வகுப்பறைகளை தொடக்கப் பள்ளிகளிலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் விரிவுபடுத்துகிற பணிகளை, பிற மாநிலங்களில் எங்கும் இல்லாத அளவிற்கு, அதனை நன்றாக expand செய்துகொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு வளர்ச்சி அடைந்துகொண்டிருக்கின்றது. அந்த வகையில், ஒரு கட்டடத்தின் அடித்தளம் எவ்வளவு முக்கியமோ, அதுபோல எதிர்கால சந்ததியின் வாழ்வின் அடித்தளமே கிராமப்புறங்களில் பால்வாடிகள் என்று சொல்லப்படுகிற இத்தகைய அங்கன்வாடிகள்தான். அந்தவகையில், இன்றைக்கு AI எனப்படும் செயற்கை நுண்ணறிவோடுகூடிய LED திரைக்காட்சிகளின்மூலமாக, அங்கன்வாடிகளுக்கு வரக்கூடிய மாணவர்களுக்கு அந்தப் பயிற்சியை வழங்கக்கூடிய புதிய வழிவகைகளை அரசு கொள்கை முடிவாக எடுப்பதுடன், அந்த அங்கன்வாடி மையங்களில் எதிர்காலத்தில், இன்றைய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி, AI development போன்றவற்றையெல்லாம் கொண்டுவரவேண்டும். ஏனென்றால், குழந்தைகள் தங்களுடைய கல்வியைத் தொடங்குகிற இடமே அங்கன்வாடி மையங்கள்தான். அங்கிருந்து தான், வளர்ச்சியை நம்முடைய மாநிலத்தில் இருக்கக்கூடிய எதிர்கால சந்ததிகள் பெறுவதற்கான வழிவகைகளை அரசு செய்திட வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

அமைச்சர் பி.கீதாஜீவன்: எதிர்கால சமுதாயமாகிய குழந்தைகளின் நலனுக்காக நம்முடைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகள் செய்து கொடுக்கும் பணிகளையும் இந்த அரசு செய்து வருகிறது. முதற்கட்டமாக, முன்னேறி வரும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும், அங்கன்வாடி மையங்களுக்கு புதிதாக RO வசதியோடு கூடிய குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் மைப்பு, LED TV அமைத்தல், உட்கட்டமைப்பு வசதிகள், புதிதாக வண்ணப்படங்கள் வரைதல் என்றெல்லாம் அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டிலே 5,590 குழந்தைகள் மையங்களை, அது போல LED TV உள்ளிட்ட வசதிகளோடு நவீனப்படுத்தவும் இந்த அரசு முயற்சித்து வருகிறது. அதுபோல 6,500 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு தொடர்ச்சியாக, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அங்கன்வாடி மையக் கட்டடங்களுக்கும் அத்துணை வசதிகள், அவர்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும், சமூகப் பொறுப்பு நிதியிலிருந்தும் செய்து வருகிறார்கள். ஆகவே, அரசும் நவீன தொழில்நுட்ப வசதிக்கேற்ப மையங்களைத் தரமுயர்த்திட நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

பூவிருந்தவல்லி தொகுதியில் மருத்துவமனையுடன் கூடிய மருத்துவக் கல்லூரி!

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி கோரிக்கை !

சென்னை, ஜன. 13-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது, பூவிருந்தவல்லி தொகுதி கழக உறுப்பினர் ஆ. கிருஷ்ணசாமி எழுப்பிய கேள்விகளும் அதற்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன் அளித்த பதில்களும் வருமாறு:-

அ.கிருஷ்ணசாமி: பூந்தமல்லி தொகுதியில் மருத்துவமனையுடன்கூடிய மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் மா.சுப்பிரமணியன்: தமிழ்நாட்டில் தற்போது 38 மாவட்டங்களில் 36 அரசு மருத்துவக் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்பது மாநில அரசின் கொள்கையாகவும் இருந்து வருகிறது. பூவிருந்தவல்லி தொகுதியைப் பொறுத்தவரை, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளடக்கி இருக்கிற ஒரு தொகுதியாகும். திருவள்ளூரில் ஏற்கெனவே ஒரு மருத்துவக் கல்லூரி இயங்கிக் கொண்டிருப்பதால், அங்கே புதிதாக மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட வேண்டிய அவசியமில்லை.

ஆ. கிருஷ்ணசாமி: பூந்தமல்லியைச் சுற்று இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி, ACS மருத்துவக் கல்லூரி, சவீதா மருத்துவக் கல்லூரி போன்ற மிகப் பிரம்மாண்டமான தனியார் மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டு புகழ்பெற்றிருக்கின்றன. பூந்தமல்லி என்பது சென்னையின் மேற்கு நுழைவாயில்; அது ஒரு மிகப் பெரிய ஜங்ஷன். அந்த இடத்தில் தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்குப் போட்டியாக ஓர் அரசு மருத்துவக் கல்லூரியைக் கட்டினால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய ஆவல். இருந்தாலும், சிறிது காலம் கடந்தாவது, அதைக் கட்டித் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யப்படுமா?

மருத்துவமனை. 2021 ஆம் ஆண்டு பூந்தமல்லியில் பொது மருத்துவமனை கட்டுவதற்காக 9 கோடி ரூபாய் நிதியைத் தாங்கள் ஒதுக்கினீர்கள். அதற்கு இடம் தேர்வு செய்வதிலே சில சங்கடங்கள் ஏற்பட்டு, வழக்கு தாக்கல் செய்துவிட்டனர். இப்போது இடம் தயாராக இருக்கிறது. ஆனால், அந்த நிதியைப் பயன்படுத்தாமல், நிதி மீண்டும் அரசுக்கு போய்விட்டது இருப்பினும் அதைக் கட்டித் தரமுடியுமா? .

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2022, நவம்பர் திங்கள் 22 ஆம் தேதி, 700 படுக்கைகள் கொண்ட ஒரு புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அங்கே தொடங்கப்பட்டு மிகச் சிறப்பான பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதைப்போல, அவருடைய சட்டமன்றத் தொகுதியில் ஏற்கெனவே 7 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு வகையான அரசு நல வாழ்வு மையங்கள், நகர்ப்புற நல வாழ்வு மையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குத் தேவையான புதிய கட்டடங்கள், துணை சுகாதார நிலையங்கள் என, இப்படி ஏராளமான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டும் இருக்கின்றன; இன்னமும் சுமார் 7 கோடி ரூபாய் செலவில் பல்வேறு கட்டட பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன .

ஆ. கிருஷ்ணசாமி: அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் மருத்துவமனை கட்டடம் கட்டுவதற்கு கேட்ட அனைத்து கட்டடங்களையும் கொடுத்து, கிட்டத்தட்ட ஐந்து கட்டடங்களைத் திறந்து வைத்திருக்கிறார். இந்தக் கூட்டத்தொடர் முடிந்ததற்குப் பிறகு, மீண்டும் சுமார் 5 மருத்துவக் கட்டடங்கள் கட்டி, திறக்கவிருக்கிறார்கள். தமிழ்நாட்டில், என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில், மருத்துவக் கட்டமைப்புகள் மிகப் பூர்த்தியாகி இருக்கிறது. அரசு நிதிநிலை அறிக்கையில் அதிகமான நிதியை மருத்துவத் துறைக்கு, தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஒதுக்குகிறார்கள். அந்த நிதியின் மூலமாக மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய மருத்துவக் கட்டமைப்புகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றனவா ?

அமைச்சர் மா. சுப்பிரமணியன்: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கு ஏற்பவும், வழிகாட்டுதல் படியும், இன்றைக்கு இந்த அரசு புதிதாகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டும் பணிகள் நிறைவுற்று, பணி நியமனங்களுக்காகக் காத்திருக்கிறது. விரைவில், அவை பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன.

அதேபோல், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் Aam Aadmi Mohalla clinicsஐப் போல், தமிழ்நாட்டில் நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் 708 அமைய வேண்டுமென்கின்ற வகையில் அறிவுறுத்தியிருக்கிறார். அந்த வகையில், 177 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 708 மருத்துவமனைகள் 21 மாநகராட்சிகளிலும், 63 நகராட்சிகளிலும் அமையும் என்று சொல்லி, அவற்றில் 500 நகர்ப்புற நல வாழ்வு மையங்களை 2023, ஜூன் திங்கள் 6 ஆம் தேதி தொடங்கி வைத்து, அவையும் தற்போது பயன்பாட்டில் இருக்கின்றன. மீதமிருக்கிற 208 மருத்துவமனைகள் பணியாளர்கள் நியமனங்களுக்காக காத்திருக்கின்றன. District health societyயின் மூலம் அந்தப் பணிகள் முடிவுற்றவுடனே, அவை பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன.

அதேபோன்று, பேரவை உறுப்பினர் கூறியதைப்போல, இந்த அரசு அமைவதற்கு முன்பு, தமிழ்நாட்டிலிருந்த மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளின் எண்ணிக்கை வெறும் 18 மட்டும்தான். ஆனால், இந்த அரசு அமைந்ததற்குப் பிறகு, முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி, 19 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துமனைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு இணையாக தரமுயர்த்தும் பணிகள் ரூ.1,018 கோடி செலவில் 5 இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகளும் மிக விரைவில் முடிவடையவிருக்கின்றன. தமிழ்நாட்டின் மருத்துவத் துறை வரலாற்றிலேயே இவ்வளவு அதிகமான மருத்துவமனைகள் கூடுதலாக வந்திருப்பது என்பது கடந்த 3½ ஆண்டுகளில் மட்டுமே!

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

கும்பகோணம் மாநகராட்சியில் புதிதாக பாதாள சாக்கடைத் திட்டத்தை அமைத்திடுக!

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் க.அன்பழகன் வலியுறுத்தல்!

சென்னை, ஜன.13-

சட்டப்பேரவையில் கும்பகோணம் தொகுதி கழக உறுப்பினர் க.அன்பழகன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு :

க.அன்பழகன்: கும்பகோணம் மாநகராட்சியில், 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாதாள சாக்கடை 60 ஆண்டுகளுக்கு பிறகு பழுதடைந்திருக்கிற இந்த சூழ்நிலையில், இன்றைக்கு கும்பகோணம் மாநகராட்சி கொஞ்சம் வார்டுகள் விஸ்தரிக்கப்பட்டு, தாராசுரம் சேர்க்கப்பட்டதற்கு பிறகு, பல இடங்களில் சாலைகளில் சாக்கடை தண்ணீரும், குடிநீரும் கலந்து செல்லும் அவல நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்களிடம் ரூ.58 கோடிக்கு புதிதாக பாதாள சாக்கடை அமைப்பதற்காகவும், சரிசெய்வதற்காகவும் ஒரு மதிப்பீடு அனுப்பப்பட்டிருக்கிறது.

அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் அணுகி விரைவாக நிதியாணைப் பெற்று, கும்பகோணம் மாநகராட்சி மக்களுடைய அவல நிலையை தீர்ப்பாரா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என்.நேரு: நம்முடைய உறுப்பினர் அன்பழகன் அவர்கள் சொல்கிறபோது கும்பகோணம் மாநகராட்சி மக்களுடைய அவலநிலை என்று சொல்கிறார். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேலாக கும்பகோணம் நகராட்சிக்கு பணம் தரப்பட்டிருக்கிறது. வாய்க்காலை சரி செய்வதற்கான திட்ட மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு மழை நீர் வடிகால் வாய்க்கால்கள் கட்டுவதற்கு கொஞ்சம் இல்லாமல் முந்தைய ஆண்டுதான் தரப்பட்டது. இந்த ஆண்டு ஒதுக்கப்படுகின்ற போது மழைநீர் வடிகால் வாய்க்கால் கட்டப்பட்டு, சாலைகளின் இரண்டு பக்கமும் retaining wall இருந்தால் சாலைகள் அதிகமாக பழுதுபடாது, நீண்ட காலம் வரும் என்ற காரணத்தால், அந்தத் திட்டத்தை முன்னுரிமை தந்து இந்த ஆண்டு செய்யச் சொல்லி முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அவல நிலை இல்லை. அது நல்ல முறையில் இருக்கிறது. மேலும் நல்ல முறையில் உருவாக்குவதற்கு உறுப்பினர் அவர்கள் சொன்னதை எடுத்துக்கொள்ளப்படும். பாதாள சாக்கடைத் திட்டம் பற்றி சொல்கிறார். பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றுகிறபோது அதை தோண்டி மீண்டும் அதைக் கொண்டு வருவதற்கு இரண்டு ஆண்டுகள் ஆகும். அவர் மறுபடியும் அதை சொல்வார். அந்தத் திட்டத்தை விரைவில் தொடங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி, 141 (அ) வட்டத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி தலைமையில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. உடன் 141 (அ) வட்டக் கழகச் செயலாளர் எஸ்.லட்சுமிகாந்தன், சென்னை தென் மேற்கு மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி, 141 (அ) வட்டக் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

திருவாரூரில் அடுக்குமாடி குடியிருப்புக் கட்டப்படுமா?

சட்டப்பேரவையில் - கழக உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் கேள்வி!

சென்னை, ஜன.13-

சட்டப்பேரவையில் திருவாரூர் தொகுதி கழக உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் எழுப்பிய கேள்வியும் அதற்கு அமைச்சர் சு.முத்துசாமி அளித்த பதிலும் வருமாறு :-

பூண்டி கே.கலைவாணன்: மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஊரான திருவாரூரில் இன்று திராவிட மாடல் ஆட்சியில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அனைத்துத் துறைகளின் சார்பான வளர்ச்சிப் பணிகள் நிறைந்துள்ள இந்த நிலையில் அருகாமையிலுள்ள கிராமப்புற மக்கள் மிகப்பெரிய அளவில் நகரில் குடியேறி வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல் திருவாரூர் நகரம் என்பது மிகப் பெரும் பான்மையாக கோயில் நிலங்கள் உள்ள பகுதியாக உள்ளதால், அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு ஒரு அடுக்குமாடி குடியிருப்புக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை கேட்டு அமர்கிறேன்.

அமைச்சர் சு.முத்துசாமி: அங்கே இடம் இருக்குமேயானால், அந்த இடத்தில் போதிய அளவுக்கு அது விற்பனையாகும் என்ற ஒரு கணக்கீட்டை எடுத்துக் கொண்டு அதைக் கட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும். எல்லா இடங்களிலேயும் இது தான் ஒரு முறையாக நாங்கள் அணுகுகிறோம். எனவே, அந்த வகையிலே திருவாரூரிலே அதைச் செய்வதற்கு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் பகுதி செயலாளர் மண்டலம் குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு அடங்கிய தொகுப்பு(புத்தாடை,இனிப்பு மற்றும் கரும்பு)வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பகுதி கழக அவைத் தலைவர் ப.காளேஸ்வரன்,பொருளாளர் ஆர். உமாசங்கர்,பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன்,பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி,மாநகர பிரதிநிதிகள் பி. ஜே.வேந்தன்,என்.கே.ரவிச்சந்தின், இரா.கந்தவேலு,ரா.கோகுல்,சு.மனோகரன்,மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பேராசிரியர் எல்.பிரபு,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன்,மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் பி.கே.அ.சத்திய பிரபு,வட்ட கழகச் செயலாளர்கள் ஆ. அனிஸ்டன்,வி.எஸ்.ஜெகநாதன்,மு.இன்பசேகர்,என்.காந்தி,எச்.முகமது அப்பாஸ்,மா.சுகுமாரன்,ப.ஸ்ரீதர்,மாமன்ற உறுப்பினர்கள் கல்யாணி டில்லி,ரம்யா சத்தியபிரபு,ஆ.மதினா பேகம்,சத்யா மதியழகன் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதி,77வது வார்டுக்கு உட்பட்ட கேசவ பிள்ளை பூங்கா குடியிருப்பு பகுதியில் உள்ள 46,47 ஆகிய பாகங்களில் வீடுவீடாக நேரில் சென்று பொது மக்களின் குறைகளை பகுதிச் செயலாளர் சொ.வேலு முன்னிலையில் மாமன்ற உறுப்பினர் பி. சுமதி,வட்டக் கழகச் செயலாளர் தி.தயாளன் ஆகியோர் கேட்டறிந்தார்கள். உடன் மாநகராட்சி, குடிநீர்,கழிவுநீர் அதிகாரிகள் மாவட்ட பிரதிநிதி டி.கிருஷ்ணன்,வட்ட துணைச் செயலாளர் கே.அன்பிற்கரசி, வட்ட பொருளாளர் எம். வெங்கட், தகவல் தொழில் நுட்ப அணி டி. பாலாஜி, பகுதிபிரதிநிதி ராஜா, மகளிர் அணி எஸ். சத்யா,எம்.பாரதி,டி. சாந்தி,கே.உஷா,எல். கோமலவள்ளி,நிர்மலா உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.